# மதுரை வடக்கு மாவட்டம் - ஒன்றிய - பகுதி - நகர பேரூர்க் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!



## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்டம் ஒன்றிய/பகுதி/நகர/பேரூர் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

| நாள் / கிழமை | ஒன்றியம் / பகுதி/ நகரம்/ பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 31.08.2024/சனிக்கிழமை | கண்ணனேந்தல் | 10.00 PM | குறிஞ்சி மஹால், திருப்பாலை |
| 31.08.2024/சனிக்கிழமை | வாடிப்பட்டி வடக்கு, வாடிப்பட்டி பேரூர் | 11.00 AM | ஜான்சி மஹால், வாடிப்பட்டி |
| 31.08.2024/சனிக்கிழமை | வாடிப்பட்டி தெற்கு, சோழவந்தான் பேரூர் | 12.00AM | சந்திரன் பேலஸ், சோழவந்தான், (பழைய கனரா வங்கி) |
| 04.09.2024/புதன்கிழமை | ஆனையூர் | 09.00 AM | ஐஸ்வர்யா மஹால், கூடல்புதூர் |
| 04.09.2024/புதன்கிழமை | கொட்டாம்பட்டி தெற்கு | 10.30 AM | சுரேஷ் மஹால், மணப்பட்டி |
| 04.09.2024/புதன்கிழமை | கொட்டாம்பட்டி கிழக்கு | 11.30 AM | அழகிரி திருமண மண்டபம், கொட்டாம்பட்டி. |
| 04.09.2024/புதன்கிழமை | கொட்டாம்பட்டி மேற்கு | 12.30 AM | தெந்திலிங்கபுரம். |
| 04.09.2024/புதன்கிழமை | மேலூர் தெற்கு | 04.00 PM | வெற்றிச்செழியன் திருமண மண்டபம்,நயத்தான்பட்டிவிளக்கு. |
| 04.09.2024/புதன்கிழமை | மேலூர் கிழக்கு | 05.00 PM | ஸ்ரீவாரிமஹால்,நாவினிப்பட்டி(ஊ) |
| 04.09.2024/புதன்கிழமை | மேலூர் வடக்கு, அ.வல்லாளப்பட்டி பேரூர் | 06.00 PM | கண்ணன் மஹால், கல்லம்பட்டி |
| 04.09.2024/புதன்கிழமை | மேலூர் நகரம் | 07.00 PM | மூவேந்தர் பண்பாட்டுக் கழகம் மேலூர் |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | மதுரை மேற்கு | 10.00 AM | அமிர்தம் மஹால், பாசிங்காபுரம் |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | மதுரை மேற்கு வடக்கு | 04.01 PM | குறிஞ்சி மஹால், திருப்பாலை |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | திருப்பாலை | 05.00 PM | கணபதி மஹால், திருப்பாலை |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | மதுரை கிழக்கு | 06.00 PM | A.P.வளையாபதி மஹால், திருமோகூர் |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | கிழக்கு தெற்கு | 07.00 PM | தேவி பேலஸ், காளிகாப்பான் |
| 06.09.2024/ வெள்ளிக்கிழமை | வண்டியூர் | 08.00 PM | தங்கச்சாமி அம்பலம் திருமண மஹால், வண்டியூர். |
| 07.09.2024/சனிக்கிழமை | அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் பேரூர் | 10.30 AM | சுபிக்ஷாமஹால்,அலங்காநல்லூர் |
| 07.09.2024/சனிக்கிழமை | அலங்காநல்லூர் மேற்கு, பாலமேடு பேரூர் | 11.30 AM | GRK மஹால், அலங்காநல்லூர். |
| 07.09.2024/சனிக்கிழமை | மதுரை கிழக்கு வடக்கு | 12.30 PM | KAS மஹால், கள்ளந்திரி |

**அமைச்சர் பி.மூர்த்தி**
செயலாளர்
மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.




திண்டுக்கல் மாவட்டம், கரியாம்பட்டி ஊராட்சியில், கரியாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அமைச்சர் சக்கரபாணி நேற்று (30.08.2024) அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு டிராக்டர் வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி, தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி உட்பட பலர் உள்ளனர்.

### கோயம்புத்தூர்- பன்னாட்டு விமான நிலையத்தில்

# குரங்கு அம்மை நோய் தடுப்பு - முன்னேற்பாடு கண்காணிப்புப் பணிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

கோவை, ஆக. 31-

கோயம்புத்தூர் பன்னாட்டு விமான நிலையத்தில் நேற்று (30.08.2024) குரங்கு அம்மை நோய் தடுப்பு மற்றும் முன்னேற்பாடு கண்காணிப்பு பணிகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்தி குமார் பாடி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி. ப.ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, மாநகராட்சி மேயர் திருமதி.இரா.இரங்கநாயகி, துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.அருணா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

உலக சுகாதார அமைப்பின் தலைவர் அவர்கள் பொதுசுகாதார அவசர நிலையினை அறிவித்துள்ளார்கள். ஐரோப்பிய நாடுகளில் பரவ தொடங்கிய குரங்கு அம்மை நோய் தற்போது, உலகம் முழுவதும் 129 நாடுகளில் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் உள்ள பன்னாட்டு விமான நிலையங்களில் குரங்கு அம்மை பாதிப்பு தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. சென்னை, மதுரை, கோவை, திருச்சி ஆகிய நான்கு பன்னாட்டு விமான நிலையங்களில் வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை கண்காணித்து அவர்களுக்கு இந்நோயின் பாதிப்பு இருக்கிறதா என்பதை கண்டறிந்து, தேவையான மருத்துவ சிகிச்சைகளை உடனடி யாக வழங்குவதற்கு ஒரு தனிமைப்படுத்தப்பட்ட வார்டும் இந்த பன்னாட்டு விமான நிலையங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த வார்டுகளில் மருத்துவர்களும் தயார்நிலையில் இருக்கின்றார்கள்.

அதன்படி, தூத்துக்குடி, சென்னை துறைமுகங்களில் கப்பல் போக்குவரத்து மூலம் வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. சென்னை பன்னாட்டு விமானநிலை யத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள, ஸ்கீரினிங் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட வார்டு குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. அதேபோன்று இன்று கோயம்புத்தூர் மாவட்ட பன்னாட்டு விமான நிலையத்தில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும், குரங்கு அம்மை நோய் அறிகுறிகள், கண்டறிதல், சிகிச்சை குறித்து பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட சுகாதார அலுவலகம் சார்பில் விளம்பர பதாகைகள் கோயம்புத்தூர் விமான நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, மதுரை ராஜாஜி மருத்துவமனை, திருச்சி கி.ஆ.பெவிஸ்வநாதன் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆகிய மருத்துவ மனைகளில் இந்நோய்க்கு சிகிச்சை அளிக்கும்வகையில், 10 படுக்கைகள் கொண்ட தனி வார்டுகளும் திறக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் எங்கும் இதுவரை இந்நோய் கண்டறியப்பட வில்லை. தமிழ்நாட்டிலும் இந்நோய் கண்டறியப்பட வில்லை இருந்தபோதிலும் தேவையான முன்னேற் பாடு பணிகள் சுகாதாரத் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### நெல்லை - பாளையங்கோட்டையில் வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில்

# வேளாண் இயந்திரங்கள் கண்காட்சி - பராமரிப்பு சிறப்பு முகாம்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்தார்! ராபர்ட்புரூஸ் எம்.பி. - மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. முன்னிலை!

நெல்லை ஆக.31-

நெல்லை பாளையங்கோட்டை வ உ சி மைதானத்தில் நேற்று (30.08.2024) வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் கண்காட்சி மற்றும் இயந்திரங்களின் பராமரிப்பு தொடர்பான மாவட்ட அளவிலான சிறப்பு முகாமில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா. ப.கார்த்திகேயன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு. அப்துல்வகாப், துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார்.

இம்முகாமில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற நாளிலிருந்து விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, திருநெல்வேலி மாவட்டத்திற்கு மட்டும் 2023-2024 ஆம் நிதியாண்டில் வேளாண் பொறியியல் துறையின் மூலம் வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் 159 வேளாண் இயந்திரங்களுக்கு ரூ.2.03 கோடி அரசு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. ளோண்மைப் பொறியியல் துறையின் மூலம் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சிறு,குறு விவசாயிகளுக்கு நீர் ஆதாரமற்ற புஞ்சை நிலத்தில் 100 சதவீதம் மானியத்தில் ஆழ்துளை கிணறு மற்றும் மின் இணைப்புடன் கூடிய மின்மோட்டார் அமைத்து கொடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல், 100 சதவீதம் மானியத்தில் பண்ணைக்குட்டை தனிப்பட்ட விவசாயின் நிலத்தில் அமைத்து கொடுக்கப்பட்டு வருகிறது.

வேளாண் இயந்திரமயமாக்கல் துணை இயக்கம் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள் 40 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை மானியத்தில் வழங்கப்படுகிறது.பொதுபிரிவு விவசாயிகளுக்கு 40 சதவீதமும், சிறு, குறு ஆதிதிராவிட பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட் திட்டத்தில் 60 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை மானியம் வழங்கப்பட்டு வருகிறது

உழவர் செயலி அல்லது இவாடகை மூலம் வேளாண் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு முன் பதிவு செய்து பயன்படுத்தி கொள்ளலாம். மேலும், திறன்குறைந்த மற்றும் பழுது அடைந்த பழைய மின் மோட்டாருக்கு பதிலாக புதிய மின்மோட்டார் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் அல்லது ரூ.15,000 மானியம் வழங்கப்படுகிறது.

மேலும், இம்முகாமில்,வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இயக்கம் மற்றும் அதன் பராமரிப்பு முறைகள் விவசாயிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. தனியார் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தயாரிக்கும் நிறு வனங்களின் பொறியாளர்களுடனும், துறை சார்ந்த அலுவலர்களுடனும் விவசாயிகள் நேரில் கலந்துரையாடி இயந்திரங் களின் செயல்பாடுகள் குறித்து விளக்கம் பெறலாம்.

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை இயக்குதல், பராமரித்தல், செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை, பழுதுகளைக் கண்டறிவது, உதிரி பாகங்கள் குறித்த தெளிவுரை மற்றும் மசகு எண்ணெய் (lubricating oil) பயன்பாடு பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ளலாம். டிராக்டர்கள் மற்றும் உபகரணங்களை விவசாயிகள் சிறந்த முறையில் கையாண்டு இயக்கிட கற்றுத்தரப்படும்.

இவ்வாறு சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

இம்முகாமில் இணை இயக்குநர் (வேளாண்மை) (பொ) கிருஷ்ணகுமார் செயற்பொறியாளர் (வே.பொ) பொறி.ராஜா தாமஸ்,உதவி செயற்பொறியாளர்கள் லட்சுமி நாராயணன்,லட்சுமி காந்தன்,ஜெரால்டு உட்பட துறைசார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சிவகங்கை மாவட்ட ‘சன்’ தொலைக்காட்சி செய்தியாளர்

# செந்தில்குமார் தாயார் லீலாவதி மறைவு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, ஆக. 31 -

சிவகங்கை மாவட்ட சன் டிவி செய்தியாளர் செந்தில்குமார். இவரது தாயார் லீலாவதி வயசு 88 . உடல்நல குறைவால் நேற்று முன்தினம் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த லீலாவதிக்கு 4 மகன்கள் 1 பெண் உள்ளார்கள். லீலாவதி உடலுக்கு மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். செந்தில்குமார் உட்பட அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ .மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் மாநில காங்கிரஸ் பொதுச்செயலாளர் பச்சேரி சி.ஆர்.சுந்தர்ராஜன் , ஒன்றிய கழக செயலாளர்கள் திருமலை முத்துராமலிங் கம்,எம். ஜெயரா மன், எம் ஜெயராமன் சிவகங்கை நகர்கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், துணைத்தலை வர் எம்.காராகண் உட்பட நகர்மன்ற உறுப்பினர்கள் பல்வேறு அரசியல் கட்சிபிரமுகர்கள் பத்திரிகையாளர்கள் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். அவரது இறுதி சடங்கு நேற்று பிற்பகல் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி
### ஆகஸ்ட் 31 (2012)



**தென்பாண்டிச் சீமையில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர்.**

**தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர்.**

**கமுதி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**கமுதி ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும், கழகத்தின் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். ‘மிசா’வில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.**

**“அனைவரிடமும் அன்பு காட்டி, அயராது உழைத்து கழகத்தை வளர்த்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.வே. செழியன்
### ஆகஸ்ட் 31 (2022)



**தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**1975ஆம் ஆண்டு தனது பகுதியில் உதயசூரியன் நற்பணி மன்றம் தொடங்கி, பின்னர் பெரியார் எழுச்சி மன்ற காப்பாளராகவும், பின்னர் வட்டக் கழகத்தில் பகுதி பிரதிநிதியாகவும் திருவல்லிக்கேணி பகுதி துணைச் செயலாளராகவும், பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து, அதனைத் தொடர்ந்து பகுதிக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றிவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“திருவல்லிக்கேணியில் கழகம் வளர்த்த உண்மைத் தொடர்” என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**